## DEPOSITION OF WITNESS

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No.46/2021**
**Prosecution Witness**:3

| | | | |
|---|---|---|---|
| Name | விஜயகுமார் (PW3) | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 03rd **day of November 2025** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused present.)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது ஈரோடு, முனியப்பம்பாளையத்தில் குடியிருந்து கொண்டு பிளம்பராக வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன ஜெயராஜ் எனது பக்கத்து வீட்டுக்காரர் ஆவார். கடந்த 29.03.2021ம் தேதியன்று ஜெயராஜ் கருமாண்டாம்பாளையம், குளதோட்டம் அருகில் ஒரு விபத்து ஏற்பட்டு கிடந்தார். நான் விபத்து பற்றி கேள்விபட்டு அன்று இரவு 08.00 மணிக்கு சம்பவ நடந்த இடத்திற்கு வந்து பார்த்தேன். நான் பார்க்கும்போது ஜெயராஜ் ரத்த வாந்தி எடுத்த நிலையில் இருந்தார். அவர் மீது எந்த வண்டி மோதி விபத்து ஏற்பட்டது என்று எனக்கு தெரியவில்லை. நான் தான் அவரை ஒரு போக்கு வண்டி மூலம் ஈரோடு தனியார் லோட்டஸ் மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தேன். அடுத்த நாள் காலை ஈரோடு லோட்டஸ் மருத்துவமனையில் ஜெயராஜ் இறந்துவிட்டதாக தகவல் தெரியவந்தது. அதன் பேரில் நான் ஈரோடு அரசு தலைமை மருத்துவமனைக்கு வந்து பார்த்தபோது போலீசார் ஜெயராஜின் பிரேதத்தை பார்வையிட்டு விசாரித்தார்கள். என்னையும் போலீசார் விசாரித்தார்கள்.

PANDIARAJAN
Digitally signed by PANDIARAJAN
Date: 2025.11.03 08:35:59 +0530

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :–**

நான் முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகளை தான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.11.03 08:36:04 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No.46/2021**
**Prosecution Witness**:4

| | | | |
|---|---|---|---|
| Name | மயில்சாமி (PW4) | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 03rd **day of November 2025** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused present.)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது ஊஞ்சலூர், குள்ளகவுண்டன்பாளையத்தில் குடியிருந்து கொண்டு டிரைவராக வேலை செய்து வருகிறேன். ஆஜரில் உள்ள எதிரியை எனக்கு தெரியாது. விபத்தில் அடிபட்ட ஜெயராஜ் என்பவரை எனக்கு தெரியாது. சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நடுப்பாளையம் வரும்வழியில் உள்ள ஒரு மெடிக்கல் கடையில் நின்றுகொண்டிருந்தேன். அப்போது ஒரு வயதான நபருக்கு ஒரு விபத்து நடந்ததாக தகவல் சொன்னார்கள். நான் சம்பவ இடம் செல்வதற்குள் அடிபட்ட அந்த நபரை மருத்துவமனைக்கு அனுப்பிவைத்துவிட்டார்கள். அந்த நபர் மீது எந்த வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது என்று எனக்கு தெரியவில்லை. விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரிக்கும்போதும் நான் மேற்கண்டவாறு தான் தகவல் சொன்னேன்.

**அரசு தரப்பில் சாட்சியை இந்திய சாட்சிய சட்டப் பிரிவு 154ன் கீழ் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:-**

போலீசார் விசாரணையின்போது கடந்த 29.03.2021ம் தேதி இரவு சுமார் 08.00

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.11.03 08:36:12 +0530

மணிக்கு நானும் எனது உறவினர் கவின் என்பவரும் ஈரோடு – கரூர் ரோட்டில் கருமாண்டம்பாளையம் குளத்தோட்டம், கார்த்திகேயன் வீட்டு முன்பு ஒரு இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்ததாகவும், அப்போது ஜெயராஜ் என்ற நபர் அங்கு வடக்கில் இருந்து தெற்கு நோக்கி நடந்து வந்து கொண்டிருந்தபோது அவருக்கு எதிர் திசையில் ஆஜர் எதிரி TN 28 L 6883 என்ற எண்ணுள்ள பஜாஜ் CT 100 இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து மேற்சொன்ன ஜெயராஜ் என்பவர் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதை நான் நேரில் பார்த்ததாக சொன்னால் சரியல்ல. தற்போது எதிரி கேட்டுக்கொண்டதால் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :–**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டதால் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்பட்டது.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN
Digitally signed by PANDIARAJAN
Date: 2025.11.03 08:36:17 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.